மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் ஈரோடு மாவட்டத்தில் 31 ஆதி திராவிடர் விடுதிகளும், 2 பழங்குடியினர் விடுதிகளும், 21 பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளும் உள்ளன. இவற்றில், அந்தியூர் தொகுதியில் மட்டும் 7 ஆதி திராவிடர் விடுதிகளும், ஒரு பழங்குடியினர் விடுதியும், 10 பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளும் இயங்கி வருகின்றன. இவற்றில் அனுமதிக்கப்பட்ட இடங்கள் 1,424 ஆகும். இவற்றில் 20 சதவிகித இடங்கள் ஆதி திராவிட மாணாக்கர்களுக்கு என ஒதுக்கப்பட்டிருந்தும் இவர்களின் சேர்க்கை மிகவும் குறைவாகவே உள்ளது. எனவே, ஆதி திராவிடர் மாணவியர்க்கென தனியே விடுதி தொடங்கினாலும், அவ்விடுதிகளில் மாணவியர்களின் சேர்க்கை குறைவாகவே இருக்கும் என்பதால், அந்தியூர் தொகுதி, பர்கூர் மலைப் பகுதியில் ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதி புதிதாகத் தொடங்கிட தேவை தற்போது எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 146, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

146—

செயற்கைக்கோள் தகவல் அறிவிப்பு இயந்திரம்

***61952—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆழ்கடலில் மீன் பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்களுக்கு செயற்கைக்கோள் தகவல் அறிவிப்பு இயந்திரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திக்கெட்டும் இருந்து திறளான வளங்களைத் தெள்ளு தமிழ் பூமிக்குக் கொண்டுவந்து

சேர்க்க 'விஷன் 2023'-ஐத் தந்த எங்கள் வெற்றித் திருமகளே, பன்னாட்டு முதலீட்டாளர்கள் மாநாடு காணும் மாதர் குல மாணிக்கமே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் வணங்கி, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) ஆழ்கடலில் மீன் பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்களுக்கு செயற்கைக்கோள் தகவல் அறிவிப்பு இயந்திரம் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செயற்கைக்கோள் தகவல் அறிவிப்பு இயந்திரம் வழங்குவது காலத்தின் கட்டாயம். தமிழகத்தில் பல்லாயிரக்கணக்கான மீனவர்கள் விசைப் படகுகளில் ஆழ்கடலுக்குச் சென்று மீன்பிடித்து வாழ்ந்து வருகிறார்கள். அதன்மூலம் கோடிக் கணக்கான ரூபாய் வருமானத்தை தமிழகத்திற்கு ஈட்டித் தருகிறார்கள். மீனவர்கள் மீன் பிடிக்கின்றபோது காற்றின் அழுத்தத்தால் கடல் எல்லையைத் தாண்டி இலங்கை, கேரளா, ஆந்திரா மற்றும் ஏனைய பகுதிகளுக்கு மாறிச் செல்வதைத் தடுப்பதற்கும் கடலில் இயற்கைச் சீற்றம் வரும்போது தப்பிச் செல்கின்ற மீனவர்களைப் பாதுகாக்கவும், மீனவர்களுக்கு செயற்கைக்கோள் தகவல் அறிவிப்பு இயந்திரம் மிகவும் இன்றியமையாதது. இது நீண்டகாலப் பிரச்சினை. இந்தக் கோரிக்கையைச் சென்ற கூட்டத் தொடரிலேயே நான் வைத்திருந்தேன். செயற்கைக்கோள் தகவல் அறிவிப்பு இயந்திரம் வழங்குவதாக இந்த அரசு அறிவித்திருந்தது. இனியாவது மீனவர்களுக்கு செயற்கைக்கோள் தகவல் அறிவிப்பு இயந்திரத்தை வழங்க அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

2015 ஆகஸ்ட் 26]

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்றும் இல்லாத அளவிற்கு மீனவச் சமுதாயத்தை இமயத்திற்கு உயர்த்த அயராது பாடுபட்டு வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, செயற்கைக்கோள் தகவல் அறிவிப்பு இயந்திரம் வழங்கும் திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆழ்கடலில் மீன்பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்களுக்கு செயற்கைக்கோள் தகவல் அறிவிப்பு இயந்திரம் எப்பொழுது வழங்குவீர்கள் என்பதையும், அனைத்து படகுதாரர்களுக்கும், மீன் பிடிப்பவர்களுக்கும் அதை வழங்குவதற்கு அரசு முன்வருமா என தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11-05

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்களுக்கு செயற்கைக்கோள் தகவல் அறிவிப்பு இயந்திரம் வழங்குவது விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் என என்னுடைய பதிலுரையில் தெளிவாகச் சொன்னேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எதைச் சொன்னாலும், சரியாகத் திட்டமிட்டுச் செய்கிற ஆற்றல் படைத்தவர். (மேசையைத் தட்டும் ஒலி) ஆதலால், நீங்கள் இந்தக் கூட்டத்தொடர் முடியும் வரையில் பொறுத்திருக்கலாம் என்று சொல்லி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு மீனவர்களுக்கு என்றும், எப்பொழுதும் உறுதுணையாக இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உங்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சட்டமன்றத்திலே 'இதையாவது' என்று ஒரு*

[2015 ஆகஸ்ட் 26

வார்த்தையைக் குறிப்பிட்டார். சென்ற மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக மைனாரிட்டி ஆட்சியில் 5 ஆண்டு காலத்தில் மீன் வளத் துறைக்கு அவர்கள் ஒதுக்கிய தொகை என்பது ரூ.196 கோடியே 44 இலட்சம் ஆகும். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கின்ற குளச்சல் சட்டமன்றத் தொகுதியில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நான்கு ஆண்டு கால ஆட்சியில் ரூ.146 கோடியே 44 இலட்சம் நிதியை ஒதுக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) மீனவர்களின் வாழ்வுக்கு ஒளியைத் தேடித் தந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 147, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.க. அரங்கநாதன், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.*

147—

தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா

***32797—திரு. ஆ.க. அரங்கநாதன்:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், துரிஞ்சாபுரம் ஒன்றியத்தில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதம் வணங்கி, எனது விடையினை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், துரிஞ்சாபுரம் ஒன்றியத்தில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்கும் உத்தேசம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.